
SINCE 2013
We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | RRB | SSC | BANK EXAM
TNPSC GROUP 1
30 DAYS
REVISION SERIES
MISSION
GROUP 1-30 DAYS CHALENGE
DAY-5
POLITY
PART-5
CONSTITUTION OF INDIA
CONSTITUTION OF INDIA
PREVIOUS YEAR QUESTIONS
EXAM FOCUSED REVISION
SMART STRATEGY
SCORE MAXIMIZATION
Anandhavelan
Weshine Faculty
www.weshineacademy.com

# Indian Polity Part 5

1. The main purpose of including the Directive Principles of State policy in the Indian Constitution is
(A) Legal Reforms and making laws
(B) People Welfare State
(C) Special protection of the interests of the weaker section of society
(D) Enforceable by Courts

இந்திய அரசியலமைப்பில் அரசு வழிகாட்டும் நெறிமுறைக் கொள்கைகளை உட்படுத்தியதன் முக்கிய நோக்கம்
(A) சட்ட சீர்திருத்தும் மற்றும் சட்ட உருவாக்கம்
(B) மக்கள் நல அரசு
(C) சமூகத்தின் பலவீனப்பட்ட வகுப்பு மக்களின் நலன்களுக்கான சிறப்பு பாதுகாப்பு
(D) நீதிமன்ற நடவடிக்கைகள்

2. Which article of Indian constitution promotes international peace and security?
(A) Article 48 (B) Article 49 (C) Article 50 (D) Article 51

எந்த அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கின்றது?
(A) அரசியல் அமைப்பு சட்டப்பிரிவு 48
(B) அரசியல் அமைப்பு சட்டப்பிரிவு 49
(C) அரசியல் அமைப்பு சட்டப்பிரிவு 50
(D) அரசியல் அமைப்பு சட்டப்பிரிவு 51

3. Directive principles of State Policy are described as "life-giving provisions of the constitution" by

(A) L.M. Singhvi (B) Ambedkar

(C) Rajendra Prasad (D) Radha Krishnan

அரசு நேரடி வழிகாட்டு கொள்கைகள் என்பது 'அரசியலமைப்பிற்கு உயிரளிக்கும் விதிகளாகும்' என ________ கூறினார்.

(A) எல். எம். சிங்வி (B) அம்பேத்கர்

(C) இராஜேந்திர பிரசாத் (D) இராதா கிருஷ்ணன்

4. Match the following:

(a) Article 39(b) — 1. Protection of Ecology, Environment from Pollution
(b) Article 48(A) — 2. Equal pay for Equal work
(c) Article 39(d) — 3. Free legal aid to the poor
(d) Article 39(A) — 4. Abolished hereditary property

(A) (a)1 (b)2 (c)3 (d)4
(B) (a)4 (b)1 (c)2 (d)3
(C) (a)4 (b)3 (c)2 (d)1
(D) (a)4 (b)1 (c)3 (d)2

கீழ்கண்டவற்றை பொருத்துக:

(a) சட்ட உறுப்பு 39(b) — 1. சூழலியல் மற்றும் சுற்றுச் சூழல் மாசுபாட்டிலிருந்து பாதுகாப்பு

(b) சட்ட உறுப்பு 48(A) — 2. சம வேலைக்கு சம ஊதியம்

(c) சட்ட உறுப்பு 39(d) — 3. ஏழை எளிய மக்களுக்கு இலவச சட்ட உதவி

(d) சட்ட உறுப்பு 39(A) — 4. பரம்பரை சொத்துடமை அழித்தல்

(A) (a)1 (b)2 (c)3 (d)4 (B) (a)4 (b)1 (c)2 (d)3

(C) (a)4 (b)3 (c)2 (d)1 (D) (a)4 (b)1 (c)3 (d)2

5. Which of the following is mismatched?
(A) Article 40 : Organisation of village panchayats
(B) Article 44 : Uniform Civil Code
(C) Article 41 : Organisation of Agriculture and animal husbandry
(D) Article 39 A : Equal Justice and free legal aid

கீழ்கண்டவற்றுள் தவறான கூற்றை சுட்டுக
(A) விதி 40 : கிராம பஞ்சாயத்து அமைப்பு
(B) விதி 44 : பொது சிவில் குறியீடு
(C) விதி 41 : விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு அமைப்பு
(D) விதி 39 A : சமநீதி மற்றும் இலவச சட்ட உதவி

6. Which among the following is/are the utility of Directive Principles of State Policy?

1.Rigid Constitution 2.Appointment of Governor 3.Integrated Judiciary

(A) 1, 3 (B) 1, 2 (C) 2, 3 (D) None

வழிகாட்டு நெறிமுறைக் கோட்பாடுகளின் பயன்பாடுகள் கீழ்க்காணப்படுபவைகளில் எது/எவை?

1.நெகிழா அரசியலமைப்பு

2.கவர்னர் நியமனம்

3.ஒருங்கிணைந்த நீதித்துறை

(A) 1, 3 (B) 1, 2 (C) 2, 3

7. Identify the article which promotes educational and economic interests of Scheduled Castes, Scheduled tribes and other weaker sections

(A) Article 46 (B) Article 15 (C) Article 334 (D) Article 342

இந்திய அரசியலமைப்பில் உள்ள பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற பலவீனமான பிரிவுகளின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை ஊக்குவிக்கும் பிரிவை அடையாளம் காணவும்

(A) பிரிவு 46 (B) பிரிவு 15 (C) பிரிவு 334 (D) பிரிவு 342

8. Who described, that the "The Directive Principles" and the "Fundamental Rights" are the conscience of the Constitution?

(A) Granville Austin (B) Dr. B.R. Ambedkar
(C) K.C. Wheare (D) Dr. Ivor Jennings

"வழிகாட்டு நெறிமுறைகளும் மற்றும் அடிப்படை உரிமைகளும்", "அரசியலமைப்பின் மனசாட்சியாக இருக்கிறது" – என விவரித்தவர் யார்?

(A) கிராவின் ஆஸ்டின் (B) Dr. B.R. அம்பேத்கர்
(C) K.C. வியர் (D) Dr. ஐவோர் ஜென்னிங்ஸ்

9. Which of the following countries is the first ever to incorporate the Directive Principles of State policy as part of their constitution?

(A) Ireland (B) America (C) India (D) Spain

அரசு நெறிமுறை கோட்பாட்டினை பின்வரும் நாடுகளில் எது முதன்முதலில் தங்கள் அரசியலமைப்பில் சேர்த்துக் கொண்டது?

(A) அயர்லாந்து (B) அமெரிக்கா

(C) இந்தியா (D) ஸ்பெயின்

10. Which article of the Constitution Provides Uniform Civil Code for the citizens?
(A) Article 42 (B) Article 43 (C) Article 44 (D) Article 45

குடிமக்களுக்கு பொது சிவில் சட்டத்தைப் பற்றிக் கூறும் அரசியலமைப்பு விதி எது?
(A) விதி 42 (B) விதி 43 (C) விதி 44 (D) விதி 45

11. Consider the following statement:

Assertion [A]: The adoption of Uniform Civil Code though mentioned in the Constitution of India is yet to be accomplished.

Reason [R]: Directive principles are Non-Justiciable.

(A) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(B) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

(C) [A] is true, but [R] is false

(D) [A] is false, but [R] is true

Weshine Academy Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:
கூற்று [கூ]: இந்திய அரசியலமைப்பின் பொது சிவில் சட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.
காரணம் [கா]: வழிகாட்டு நெறிமுறை கோட்பாடானது நீதிதுறைக்கு அப்பாற்பட்டது.
(A) [கூ] மற்றும் [கா] இரண்டும் சரி, மற்றும் [கா], [கூ] விற்கு சரியான விளக்கம்
(B) [கூ] மற்றும் [கா] இரண்டும் சரி, மற்றும் [கா], [கூ] விற்கு சரியான விளக்கம் அல்ல
(C) [கூ] சரியானது, ஆனால் [கா] தவறு
(D) [கூ] தவறு ஆனால் [கா] சரியான கூறு

12. Which Constitutional Amendment inserted Article 43B for promotion of Co-operative Societies?

(A) 42nd Amendment, 1976
(B) 44th Amendment, 1978
(C) 86th Amendment, 2002
(D) 97th Amendment, 2011

எந்த அரசியலமைப்பு திருத்தச் சட்டம் கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிப்பதற்காகப் பிரிவு 43B-யை இணைத்தது?

(A) 42வது திருத்தச்சட்டம், 1976
(B) 44வது திருத்தச்சட்டம், 1978
(C) 86வது திருத்தச்சட்டம், 2002
(D) 97வது திருத்தச்சட்டம், 2011

13. Which article of the Constitution states that the state to secure a social order for the promotion of welfare of the people?

(A) Article 38 (B) Article 39 (C) Article 37 (D) Article 36

மக்கள் நலனை மேம்படுத்துவதற்காக ஒரு சமூக ஒழுங்கை அரசு பாதுகாக்க வேண்டும் என்று எந்த அரசியலமைப்பு சட்டப்பிரிவு கூறுகிறது?

(A) சட்டப்பிரிவு 38 (B) சட்டப்பிரிவு 39

(C) சட்டப்பிரிவு 37 (D) சட்டப்பிரிவு 36

14. Assertion [A]: Directive Principles of State Policy (DPSP) are described as 'novel feature' of Indian Constitution, according to B.R. Ambedkar.
Reason [R]: DPSP acts as a guideline for the state.
(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
(C) [A] is false, [R] is true
(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

கூற்று [A]: அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் இந்திய 'அரசியலமைப்பின் புதுமையான சிறப்பம்சம்' என B.R. அம்பேத்கரால் விவரிக்கப்படுகிறது.
காரணம் [R]: அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் நாட்டிற்கான வழிகாட்டியாக செயல்படுகிறது.

(A) [A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி [R] என்பது [A] யின் சரியான விளக்கம்

(C) [A] தவறு ஆனால் [R] சரி

(D) [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரியானது ஆனால் [R] க்கு சரியான விளக்கம் [A] இல்லை

15. The state to provide free legal aid to the poor has been inserted to Indian constitution by which amendment?

(A) 42nd Amendment (B) 44th Amendment
(C) 62nd Amendment (D) 43rd Amendment

'ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி அரசு வழங்குவதற்கான சட்டம்' எந்த அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் மூலம் இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது?

(A) 42வது சட்டதிருத்தம் (B) 44வது சட்டதிருத்தம்
(C) 62வது சட்டதிருத்தம் (D) 43வது சட்டதிருத்தம்

16. The Directive Principles of State Policy of Indian Constitution resembles

(A) Magna Carta, 1215
(B) Charter Act, 1813
(C) Instrument of Instructions, 1935
(D) Regulating Act, 1773

இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் ________ போல் தோற்றம் அளிப்பவையாகும்.

(A) மாக்னா சாசனம், 1215
(B) பட்டயச் சட்டம், 1813
(C) அறிவுறுத்தல் செயற்கருவி, 1935
(D) ஒழுங்குபடுத்தும் சட்டம், 1773

17. Which of the following are wrongly paired?

(1) Obligation for the state and individual to protect environment — Art 48A

(2) Early childhood care and education for all children until they years complete the age of fourteen — Art 45

(3) Separate judiciary from the executive in the public services of the state — Art 39

(4) Voluntary formation, autonomous functioning of cooperative societies — Art 44

(A) (1), (3) and (4) only (B) (2), (3) and (4) only

(C) (1) and (2) only (D) (3) and (4) only

பின்வருவனவற்றில் தவறாக இணைக்கப்பட்டவை எவை?

(1) சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு மற்றும் தனிநபரின் கடமை — விதி 48A

(2) அனைத்து குழந்தைகளுக்கும் 14 வயது முடியும் வரை குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கல்வி — விதி 45

(3) மாநிலத்தின் பொதுச் சேவைகளின் நிர்வாகத்திலிருந்து தனி நிதித்துறை — விதி 39

(4) தன்னார்வ உருவாக்கம், கூட்டுறவு சங்கங்களின் தன்னாட்சி செயல்பாடு — விதி 44

(A) (1), (3) மற்றும் (4) மட்டும்
(B) (2), (3) மற்றும் (4) மட்டும்
(C) (1) மற்றும் (2) மட்டும்
(D) (3) மற்றும் (4) மட்டும்

18. The state shall try to secure the improvement of public health is according to which of the following article.

(A) Article 47 (B) Article 48 (C) Article 43 (D) Article 45

அரசு பொது சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பது கீழ்க்காணும் விதிகளில் எது சரியானது?

(A) விதி 47 (B) விதி 48 (C) விதி 43 (D) விதி 45

19. Choose the correctly matched pair from the following:

(i) Preamble — Not part of the constitution
(ii) Directive Principle of State Policy — Duty of the State
(iii) Fundamental Duties — Duty of the Parliament
(iv) Fundamental Rights — Duty of the Citizen

(A) (i) (B) (ii) (C) (iii) (D) (iv)

கீழ்காணும் ஜோடிகளில் சரியாகப் பொருந்தி உள்ளதை தேர்ந்தெடுக்கவும்:

(i) முகவுரை — அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதியல்ல
ii) அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் — அரசின் கடமை
(iii) அடிப்படைக் கடமைகள் — பாராளுமன்றத்தின் கடமை
(iv) அடிப்படை உரிமைகள் — குடிமகனின் கடமைகள்

(A) (i) (B) (ii) (C) (iii) (D) (iv)

20. Which of the following reflects the social ideology of the directive principles of state policy?
(A) Organising village panchayats
(B) Encouraging cottage industries
(C) Providing adequate means of livelihood
(D) Protection of monuments

பின்வரும் அரசு வழிகாட்டு நெறிமுறைக் கோட்பாடுகளில் சமூகச் சிந்தனையைப் பிரதிபலிப்பது எது?
(A) கிராமப் பஞ்சாயத்துகளை நிறுவுதல்
(B) குடிசைத் தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்
(C) வாழ்வாதாரத்திற்கான வழிமுறைகளை போதுமான அளவு வழங்குதல்
(D) நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

21. Who described Directive Principle of State policy as a 'novel feature' of Indian Constitution?

(A) Dr. B.R. Ambedkar
(B) Mahatma Gandhi
(C) Pylee
(D) Mountbaten

அரசு வழிகாட்டு நெறிமுறைக் கொள்கைகள் இந்திய அரசியலமைப்பின் 'புதுமையான இயல்பு' என விவரித்தவர் யார்?

(A) டாக்டர். பி.ஆர். அம்பேத்கர்
(B) மகாத்மா காந்தி
(C) பைலி
(D) மௌன்ட்பேட்டன்

22. Match the followings (with respect to Directive Principle of State Policy):

| | |
|---|---|
| (a) Socialistic principles | — 1. Uniform Civil Code |
| (b) Gandhian principles | — 2. To protect and improve the environment |
| (c) Liberal principles | — 3. Community development programme |
| (d) New Directive principles | — 4. Equal pay for equal work for both men and women |

(A) (a)4 (b)3 (c)1 (d)2
(B) (a)3 (b)4 (c)2 (d)1
(C) (a)2 (b)1 (c)3 (d)4
(D) (a)1 (b)2 (c)4 (d)3

கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக: (அரசு வழிகாட்டு நெறிகள்)

(a) பொதுவுடமை கொள்கைகள் — 1. பொது சிவில் சட்டம்
(b) காந்தியக் கொள்கைகள் — 2. சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் காப்பாற்றுதல்
(c) தாராளவாத கொள்கைகள் — 3. சமூக மேம்பாட்டுத் திட்டம்
(d) புதிய வழிகாட்டு நெறிமுறைக் கொள்கைகள் — 4. ஆண் மற்றும் மகளிர்க்கு சமவேலைக்கு சம ஊதியம் வழங்குதல்

(A) (a)4 (b)3 (c)1 (d)2
(B) (a)3 (b)4 (c)2 (d)1
(C) (a)2 (b)1 (c)3 (d)4
(D) (a)1 (b)2 (c)4 (d)3

23. Consider the following statements:
In the words of Dr. B.R. Ambedkar, Directive Principles of State Policy are the "Novel Feature" of the Indian Constitution because,
I. These principles are in the nature of general direction or guidance to the state.
II. They embody the principles or objectives and ideals which Union and State Governments must bear in mind while formulating policy and making laws.
Which is the statements given above is/are correct.
(A) I only (B) II only (C) Both I and II (D) Neither I nor II

கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி.
Dr. பி.ஆர். அம்பேத்கார் கூறியதாவது "அரசு வழிகாட்டி கோட்பாடுகள், இந்திய அரசமைப்பின் சட்டத் திரட்டல் குறாதது" எனென்றார்.
I. இவை நாட்டின் அரசு வழிகாட்டியாக அமைந்துள்ளன
II. மத்திய மாநில அரசுகள் தம் சட்டங்களையும், கொள்கைகளையும் இயற்றும் போது இவை உதவியாக அமைக்கும்
இவற்றில் எது/எவை சரியானவை?

(A) I மட்டும் (B) II மட்டும்
(C) I மற்றும் IIம் (D) I ம் இல்லை II ம் இல்லை

24. From which of the following constitution, the source of "Directive principles of state policy" of constitution of India, was derived

(A) Ireland (B) Iceland (C) Netherland (D) Poland

கீழ்வரும் எந்த நாட்டு அரசியல் அமைப்பிலிருந்து இந்திய அரசியல் அமைப்பில் உள்ள "அரசு நெறிமுறை கோட்பாடு" என்ற ஆதாரம் எடுக்கப்பட்டது

(A) அயர்லாந்து (B) ஐஸ்லாந்து

(C) நெதர்லாந்து (D) போலந்து

25. Match the following

| Subject | Related Article |
|---|---|
| (a) Adequate Means of Livelihood | — 1. Article-38 |
| (b) Decent Standard of Life | — 2. Article-41 |
| (c) Report to Work | — 3. Article-43 |
| (d) People's Welfare | — 4. Article-39 |

(A) (a)3 (b)2 (c)1 (d)4
(B) (a)2 (b)3 (c)4 (d)1
(C) (a)4 (b)3 (c)2 (d)1
(D) (a)3 (b)4 (c)1 (d)2

கீழ்க்காண்பவற்றைப் பொருத்துக:

| பொருள் | தொடர்பான சட்ட உறுப்பு |
|---|---|
| (a) போதுமான வாழ்வாதாரம் | — 1. சட்ட உறுப்பு-38 |
| (b) கண்ணியமான தர வாழ்வு | — 2. சட்ட உறுப்பு-41 |
| (c) பணியுரிமை | — 3. சட்ட உறுப்பு-43 |
| (d) மக்கள் நலன் | — 4. சட்ட உறுப்பு-39 |

(A) (a)3 (b)2 (c)1 (d)4
(B) (a)2 (b)3 (c)4 (d)1
(C) (a)4 (b)3 (c)2 (d)1
(D) (a)3 (b)4 (c)1 (d)2

26. Which of the following is not a directive principle's of State Policy?
(A) Securing equal pay for equal work for both men and women
(B) Improving working conditions
(C) Upliftment of SCs/STs
(D) Abolition of untouchability

கீழ்வருவனவற்றுள் எது அரசு வழிகாட்டு நெறிமுறைக் கோட்பாடு அல்ல
(A) பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் சம வேலைக்கு சமமான ஊதியம் வழங்குதல்
(B) பணியிட வசதிகளை மேம்படுத்தல்
(C) அட்டவணைப்படுத்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர்களின் நிலைமையை உயர்த்துதல்
(D) தீண்டாமையை ஒழித்தல்

**27. Which of the following Articles says that the Directive Principles cannot be enforceable by any court?**

**(A) Article 37 (B) Article 38 (C) Article 39 (D) Article 40**

**அரசு வழிகாட்டு நெறிமுறைகளை நீதிமன்றம் மூலம் செயல்படுத்த முடியாது என தெரிவிக்கும் அரசியலமைப்பு ஷரத்து யாது?**

**(A) ஷரத்து 37 (B) ஷரத்து 38 (C) ஷரத்து 39 (D) ஷரத்து 40**

28. Which article states the 'state shall strive to promote the welfare of the people by securing and protecting as effectively as it may a social order in which justice, social, economic and political shall inform all the institutions of the national life?

(A) Article 38 (B) Article 15 (C) Article 16 (D) Article 40

"அரசு, தேசிய வாழ்வின் அமைவனங்கள் அனைத்திலும், சமுதாய, பொருளியல், அரசியல், நீதி நிறைந்து நிலவுவதான ஒரு சமுதாய முறையமைவினைப் பயனுற எய்திப் பாதுகாத்து, மக்களின் நலப்பாட்டை வளர்த்திட அறிதின் முயலுதல் வேண்டும்" என்று கூறும் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு

(A) ஷரத்து 38 (B) ஷரத்து 15 (C) ஷரத்து 16 (D) ஷரத்து 40

29. Arranging following events in chronological order
(1) The Plantation Labour Act
(2) The Hindu Widow Remarriage Act
(3) The Dowry Prohibition Act
(4) Indecent Representation Act
(A) (4), (1), (3), (2) (B) (1), (4), (2), (3) (C) (2), (1), (3), (4) (D) (1), (3), (2), (4)

பின்வருவனவற்றை கால வரிசை அடிப்படையில் வரிசைப்படுத்துக
(1) தோட்ட தொழிலாளர்கள் சட்டம்
(2) இந்து விதவை மறுமணச் சட்டம்
(3) வரதட்சணை தடைச் சட்டம்
(4) அநாகரிகமாக சித்தரித்ததுக்கெதிரான சட்டம்
(A) (4), (1), (3), (2) (B) (1), (4), (2), (3) (C) (2), (1), (3), (4) (D) (1), (3), (2), (4)

30. Which of the following statements are true about Directive Principles of state policy?

(i) Article 36 to 51 deals with directive principles of state policy.

(ii) Dr. B.R. Ambedkar described it as "novel features" of the Indian Constitution.

(iii) These principles are enforceable by the courts.

(A) (i) only (B) (i) and (iii) only

(C) (i) and (ii) only (D) (ii) and (iii) only

கீழ்க்காணும் கூற்றுகளில் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளை பற்றிய சரியான கூற்றை கண்டறிக:

(i) சட்டப்பிரிவு 36 - இருந்து 51 வரை அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் பற்றி கூறியுள்ளது.

(ii) டாக்டர் B.R. அம்பேத்கர் இதனை இந்திய அரசியலமைப்பின் புதுமையான சிறப்பம்சம் என விவரிக்கிறார்.

(iii) இந்த கொள்கைகளை நீதிமன்றத்தால் வலுக்கட்டாயமாக செயல்படுத்த முடியும்.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்

31. The framers of the Constitution incorporated the duties of the State in the constitution in the form of the

(A) Fundamental Duties
(B) Fundamental Rights
(C) Directive principle of state policy
(D) Rights of Citizen

அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் அரசின் கடமைகளாக அரசியலமைப்பில் இந்த வடிவத்தில் சேர்த்தனர்.

(A) அடிப்படை கடமைகள்
(B) அடிப்படை உரிமைகள்
(C) அரசின் வழிகாட்டும் நெறிமுறைகள்
(D) குடிமக்களுக்கான உரிமைகள்

32. Who called the Directive Principles of state policy as "a manifesto of aims and aspirations"?

(A) K.C. Wheare (B) T.T. Krishnamachari

(C) Sir Ivor Jennings (D) B.R. Ambedkar

அரசு நெறிமுறைக் கொள்கைகளை "நோக்கங்கள் மற்றும் விழைவுகளின் அறிக்கை" என அழைத்தவர் யார்?

(A) கே.சி. வேயர் (B) டி.டி. கிருஷ்ணமாச்சாரி

(C) சர் ஐவர் ஜென்னிங்ஸ் (D) பி.ஆர். அம்பேத்கர்

33. Equal Justice and free legal aid to the poor are guaranteed under

(A) Article 39 (B) Article 39 A (C) Article 43 A (D) Article 21

ஏழைகளுக்கு சம நீதி மற்றும் இலவச சட்ட உதவி இதன் மூலம் உத்திரவாதப்படுத்தப்பட்டுள்ளது

(A) அரசியலமைப்பு விதி 39
(B) அரசியலமைப்பு விதி 39 A
(C) அரசியலமைப்பு விதி 43 A
(D) அரசியலமைப்பு விதி 21

34. Which amendment act added a new directive principle relating to co-operative societies?

(A) 44th amendment act
(B) 86th amendment act
(C) 97th amendment act
(D) 42nd amendment act

கூட்டுறவு சங்கங்களை பற்றிய புதிய கொள்கை வழிமுறைகளை ஏற்படுத்திய அரசியல் சாசன திருத்த சட்டம் எது?

(A) 44வது திருத்தச்சட்டம்
(B) 86வது திருத்தச்சட்டம்
(C) 97வது திருத்தச்சட்டம்
(D) 42வது திருத்தச்சட்டம்

35. The children have the right to get early childhood care and education by the state under article

(A) Article 45 (B) Article 41 (C) Article 42 (D) Article 39

குழந்தைகள் தங்களின் இளம் பருவ குழந்தைகள் பராமரிப்பு மற்றும் கல்வி உரிமையை அரசிடம் இருந்து பெறுவதை பற்றி கூறும் அரசமைப்பு சட்ட உறுப்பு

(A) அரசியல் சாசன விதி 45

(B) அரசியல் சாசன விதி 41

(C) அரசியல் சாசன விதி 42

(D) அரசியல் சாசன விதி 39

36. Identify the correct statement with respect to Directive principles of state policy.
(i) It has been borrowed from Irish Constitution.
(ii) Through 42nd Amendment four new Directives principles were added to the original list.
(iii) Through 44th Amendment two new Directive principles were added to the original list
(iv) Through 97th Amendment one Directive principle relating to cooperative societies were added

(A) (i), (ii) and (iii) are correct
(B) (i), (ii) and (iv) are correct
(C) (i) and (ii) are correct
(D) (i) and (iv) are correct

வழிகாட்டு நெறிமுறைகளைப் பற்றிய சரியான கூற்றினை கண்டறிக.
(i) இது அயர்லாந்து அரசமைப்பிலிருந்து பெறப்பட்டது.
(ii) 42வது சட்டதிருத்தத்தின் மூலமாக நான்கு புதிய வழிகாட்டு நெறிமுறைகள் சேர்க்கப்பட்டன.
(iii) 44வது சட்ட திருத்தத்தின் மூலமாக இரண்டு புதிய வழிகாட்டு நெறிமுறைகள் சேர்க்கப்பட்டன.
(iv) 97வது சட்ட திருத்தத்தின் படி கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான ஒரு வழிகாட்டு நெறிமுறை சேர்க்கப்பட்டது.
(A) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரியானவை
(B) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை
(C) (i) மற்றும் (ii) ஆகியவை சரியானவை
(D) (i) மற்றும் (iv) ஆகியவை சரியானவை

37. The Amendment Act which added a new directive principle relating to Co-operative Society is the

(A) 97th Amendment Act, 2011
(B) 42nd Amendment Act, 1976
(C) 44th Amendment Act, 1978
(D) 86th Amendment Act, 2002

கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான புதிய அரசு நெறிமுறைக் கொள்கையை சேர்த்த அரசியலமைப்பு திருத்தச் சட்டம் எது?

(A) 97வது திருத்தச் சட்டம், 2011
(B) 42வது திருத்தச் சட்டம், 1976
(C) 44வது திருத்தச் சட்டம், 1978
(D) 86வது திருத்தச் சட்டம், 2002

38. Consider the following statements on Directive Principles of State Policy and choose the correct option from below:

I. The principles laid down in it are fundamental in the governance of the country.

II. It has been described as forerunners of UN Convention of Right to development.

III. The objective of it is to embody the concept of Welfare State.

IV. Parliament can amend the Fundamental Rights for implementing the Directive Principles.

(A) (I) and (III) are correct
(B) (I), (II) and (III) are correct
(C) (I), (II) and (IV) are correct
(D) All are correct

அரசின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பற்றிய கீழ்கண்ட வாக்கியங்களை கவனி மற்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியானதை தேர்ந்தெடு:

I. நாட்டின் ஆளுகைக்கான அடிப்படை கோட்பாடுகள் இந்த வழிமுறைகளில் கூறப்பட்டுள்ளன.

II. ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் மேம்பாட்டு உரிமைக்கான முன்னோடியாக இது கருதப்படுகிறது.

III. நல அரசு எனும் கருத்தியலை உள்ளடக்கியதாக இதன் நோக்கம் உள்ளது.

IV. வழிகாட்டு நெறிமுறைகளை அமல்படுத்துவதற்காக நாடாளுமன்றம் அடிப்படை உரிமைகளை திருத்தலாம்.

(A) (I) மற்றும் (III) ஆகியவை சரியானவை

(B) (I), (II) மற்றும் (III) ஆகியவை சரியானவை

(C) (I), (II) மற்றும் (IV) ஆகியவை சரியானவை

(D) அனைத்தும் சரியானவை

39.Articles dealing with "Directive principles of state policy" covers

(A) From 36 to 51
(B) From 37 to 68
(C) From 36 to 55
(D) From 38 to 51

அரசின் வழிகாட்டும் நெறிமுறை கோட்பாடு-பற்றிக் கூறும் சரத்துக்கள் ________ வரையாகும்

(A) 36 லிருந்து 51 வரை
(B) 37 லிருந்து 68 வரை
(C) 36 லிருந்து 55 வரை
(D) 38 லிருந்து 51 வரை

40. Choose the Incorrect matches on the Directive principles:

| Subject | Amendment |
|---|---|
| (1) Free legal aid to poor | — 42nd Amendment |
| (2) Minimising inequalities in income | — 44th Amendment |
| (3) Cooperative societies | — 86th Amendment |
| (4) Safeguarding forest and wild life | — 97th Amendment |

(A) (1) and (3) are incorrect
(B) (2) and (3) are incorrect
(C) (3) and (4) are incorrect
(D) (2) and (4) are incorrect

வழிகாட்டு நெறிமுறைகள் பற்றிய கீழ்க்கண்ட இணைகளில் தவறான இணையை தேர்ந்தெடு

| பொருள் | சட்டதிருத்தம் |
|---|---|
| (1) ஏழைகளுக்கான இலவச சட்ட உதவி | – 42 வது சட்ட திருத்தம் |
| (2) வருமானத்தில் காணப்படும் ஏற்ற தாழ்வுகளை குறைத்தல் | – 44 வது சட்ட திருத்தம் |
| (3) கூட்டுறவு சங்கங்கள் | – 86 வது சட்ட திருத்தம் |
| (4) காடு மற்றும் வன உயிர் பாதுகாப்பு | – 97 வது சட்ட திருத்தம் |

(A) (1) மற்றும் (3) தவறானவை
(B) (2) மற்றும் (3) தவறானவை
(C) (3) மற்றும் (4) தவறானவை
(D) (2) மற்றும் (4) தவறானவை

41. Match the following:

(a) Justice should not be denied to anyone based on the grounds of Economic (or) financial setbacks — 1. Article 42

(b) Establishment of Gram Panchayat by providing needful powers to these self governing units — 2. Article 43

(c) Favorable, Humanitariate situation to work and to provide maternity benefits to women — 3. Article 39 A

(d) To ensure work, pay, favourable climate to Agricultural (or) Skillful Labourers — 4. Article 40

(A) (a)4 (b)3 (c)2 (d)1
(B) (a)1 (b)3 (c)2 (d)4
(C) (a)3 (b)4 (c)1 (d)2
(D) (a)2 (b)3 (c)4 (d)1

சரியானவற்றை பொருத்துக:

(a) பொருளாதார அல்லது நிதி இயலாமை காரணமாக எவருக்கும் சட்ட நீதி மறுக்கப்படலாகாது என்பது — 1. உறுப்பு 42

(b) கிராம பஞ்சாயத்துக்களை ஏற்படுத்த வேண்டும், அவை சுய ஆட்சியின் அலகுகளாக செயல்படத் தேவையான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பது — 2. உறுப்பு 43

(c) பணிபுரிவதற்கான நியாயமான மற்றும் மனித இரக்கமிக்க சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும் மற்றும் பேறுகால உதவி வழங்கப்பட வேண்டும் என்பது — 3. உறுப்பு 39 A

(d) வேளாண் அல்லது தொழிலகத் தொழிலாளர்களுக்கு வேலை, வாழ்வூதியம், நல்ல வாழ்க்கைத் தரத்தைத் தரவல்ல பணிபுரியும் சூழல் உறுதி செய்யவேண்டும் என்பது — 4. உறுப்பு 40

(A) (a)4 (b)3 (c)2 (d)1
(B) (a)1 (b)3 (c)2 (d)4
(C) (a)3 (b)4 (c)1 (d)2
(D) (a)2 (b)3 (c)4 (d)1

42. Which of the following is incorrectly paired?
(1) MFAL — Marginal Farmers and Agricultural Labourer Development Agency
(2) DPAP — Drought Prone Area Programme
(3) DDP — District Development Programme
(4) HDA — Hills Development Agencies
(A) (1) and (2) (B) (1) and (3) (C) (3) and (4) (D) (2) and (3)

பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுத்து எழுதுக.
(1) MFAL — இறுதிநிலை விவசாயி மற்றும் விவசாயக் கூலி தொழிலாளி முன்னேற்றத் திட்டம்
(2) DPAP — வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக்கான திட்டம்
(3) DDP — மாவட்ட வளர்ச்சித் திட்டம்
(4) HDA — மலை பகுதிக்கான முன்னேற்றத் திட்டம்
(A) (1) மற்றும் (2) (B) (1) மற்றும் (3)
(C) (3) மற்றும் (4) (D) (2) மற்றும் (3)

43. The correct statements on the Directive principles of state policy are
(i) The Directive principles of the state policy are provided in Article 36 to 51 of the constitution.
(ii) The framers of the constitution borrowed this idea from the Spanish constitution.
(iii) The Directive principles form the soul of the constitution.

(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (ii) and (iii) only

அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் குறித்த சரியான கூற்றுகள்:
(i) அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் அரசியலமைப்பின் 36 முதல் 51 வரையிலான பிரிவுகளில் இடம்பெற்றுள்ளன.
(ii) அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இக்கோட்பாட்டை ஸ்பானிய அரசியலமைப்பிலிருந்து பெற்றனர்.
(iii) நெறிமுறைக் கோட்பாடுகள் அரசியலமைப்பின் ஆன்மாவாகத் திகழ்கின்றன.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்

44. Which of the following Articles deal with Directive principles of State Policy?

(A) Articles 51 to 76
(B) Articles 52 to 55
(C) Articles 38 to 51
(D) Articles 36 to 51

பின்வரும் விதிகளில் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை எந்த விதிகள் விவரிக்கிறது?

(A) விதிகள் 51 லிருந்து 76
(B) விதிகள் 52 லிருந்து 55
(C) விதிகள் 38 லிருந்து 51
(D) விதிகள் 36 லிருந்து 51

45. Match the following:

Article — Subject Matter

(a) Article 38 — 1. Constitutional Supremacy
(b) Article 39 — 2. Child labour
(c) Article 40 — 3. Village panchayat administration
(d) Article 43 — 4. Wage for work

கீழ்கண்டவற்றை பொருத்துக:

சட்டப்பிரிவு — மையப்பொருள்

(a) பிரிவு 38 – 1. சட்டத்தின் முன் சமம்
(b) பிரிவு 39 – 2. குழந்தை தொழிலாளர்
(c) பிரிவு 40 – 3. கிராம பஞ்சாயத்து நிர்வாகம்
(d) பிரிவு 43 – 4. வேலைக்கு ஏற்ற ஊதியம்

46. Directive principles of the state policy of the constitution is in the:

(A) Part III (B) Part IV (C) Part II (D) Part V

இந்திய அரசமைப்பின் வழிகாட்டு நெறிமுறைகள் எதனுள் அடங்கியுள்ளது?

(A) பாகம் III (B) பாகம் IV (C) பாகம் II (D) பாகம் V

47. Which of the following statements about fundamental duties is not true?
(A) Swaran Singh Committee suggested the incorporation of 10 fundamental duties in the Constitution
(B) Fundamental duties in the Indian Constitution are inspired by the Constitution of USSR
(C) Fundamental duties were included by the 42nd Amendment Act
(D) They are enforceable by law

அடிப்படை கடமைகளைப் பற்றிய கீழ்க்காணப்படும் வாக்கியங்களில் எவை தவறானவை?
(A) இந்திய அரசியல் சாசனத்தின் 10 அடிப்படை கடமைகளை அறிமுகப்படுத்திய கரன்சிங் குழு பரிந்துரைத்தது
(B) இந்திய அரசியல் சாசனத்தில் உள்ள அடிப்படை கடமைகள் கருத்து சோவியத் நாட்டிலிருந்து பெறப்பட்டது
(C) அடிப்படைக் கடமைகளை 42வது திருத்தல் சட்டம் அறிமுகப்படுத்தியது
(D) அவை சட்டத்தால் செயல்படுத்தப்படுகின்றன

48. Which feature of the Indian constitution stipulates that it shall be the duty of every citizen of India to develop the scientific temper, humanism, the sprit of inquiry and reform?

(A) Fundamental duties
(B) Fundamental rights
(C) Directive principles of state policy
(D) Preamble

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எந்த அம்சம் ஒவ்வொரு இந்திய குடிமகனையும் அறிவியல் மனப்பாங்கு, மனிதநேயம், ஆய்ந்தறியும் வேட்கை, சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது?

(A) அடிப்படை கடமைகள்
(B) அடிப்படை உரிமைகள்
(C) அரசு கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள்
(D) முகவுரை

49. Consider the following statements on Fundamental Duties:
1.Parliament cannot enforce it by a legislation
2.It is applicable only to Indian citizens
3.All Fundamental duties are either moral or civil duties
4.Paying taxes is a fundamental duty
Which of the above statements are true?
(A) 2, 3 and 1 are correct
(B) 1, 2, 3 and 4 are correct
(C) 2 and 3 are correct
(D) 1, 3 and 4 are correct

அடிப்படைக் கடமைகள் தொடர்பான கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனிக்கவும்
1.நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் இதை அமல்படுத்த முடியாது
2.இது இந்திய குடிமக்களுக்கே பொருந்தும்
3.அனைத்து அடிப்படை கடமைகளுமே ஒழுக்க நெறிகளையோ அல்லது குடிமை கடமைகளையோ அடிப்படையாக கொண்டவை
4.அரசுக்கு வரிகளை செலுத்துவதும் ஒரு அடிப்படை கடமை
மேற் கூறப்பட்டுள்ளவற்றுள் எவை சரியானவை?
(A) 2, 3 மற்றும் 1 சரியானவை
(B) 1, 2, 3 மற்றும் 4 சரியானவை
(C) 2 மற்றும் 3 சரியானவை
(D) 1, 3 மற்றும் 4 சரியானவை

50. Identify the fundamental duty that was added in 2002 by the 86th Amendment Act.
(A) Respect National Flag
(B) Defend our country
(C) Develop Scientific Temper
(D) To provide opportunities for education to children between the age of 6-14 years

2002ல் 86வது அரசியல் சாசன திருத்தல் சட்டம் மூலமாக சேர்க்கப்பட்ட அடிப்படை கடமையை கண்டறிக.
(A) தேசிய கொடியை மதித்தல்
(B) நமது நாட்டை பாதுகாத்தல்
(C) அறிவியல் உணர்வை மேம்படுத்துதல்
(D) 6 முதல் 14 வயது குழந்தைகளுக்கான கல்வி கற்கும் வாய்ப்பு வழங்குதல்

51. Name the committee that was appointed to make recommendations about fundamental duties

(A) V.K. Sharma Committee
(B) Santhanam committee
(C) Swaran Singh committee
(D) Balwantrai Mehta committee

அடிப்படை கடமைகள் பற்றி பரிந்துரைக்க அமைக்கப்பட்ட குழுவினை குறிப்பிடுக

(A) V.K. ஷர்மா குழு
(B) சந்தானம் குழு
(C) சுவரன் சிங் குழு
(D) பல்வந்த்ராய் மேத்தா குழு

52. Fundamental Duties were incorporated in the constitution on the recommendation of

(A) Shah Commission (B) Santhanam Committee

(C) Administrative reforms commission (D) Swarnam Singh Committee

அடிப்படைக் கடமைகள் அரசியலமைப்பில் சேர்க்க பரிந்துரை செய்தது.

(A) ஷா ஆணையம் (B) சந்தானம் கமிட்டி

(C) நிர்வாக சீர்திருத்த ஆணையம் (D) சுவரன்சிங் குழு

53. Which of the following statement is false?
(A) Fundamental Duties are given in Part IV of the Constitution
(B) After the 42nd Constitutional amendment fundamental duties have been added to the Constitution of India
(C) In 2002, after the 82nd Constitution amendment act, another fundamental duty was added
(D) Public Representation Act was passed in 1951

கீழ்கண்டவற்றுள் தவறானது எது?
(A) அடிப்படைக் கடமைகள் இந்திய அரசியலமைப்பின் நான்காம் பாகத்தில் உள்ளது
(B) 42வது சட்ட திருத்தத்தின்படி அடிப்படைக் கடமை இந்திய அரசியலமைப்புடன் இணைக்கப்பட்டது
(C) 2002ஆம் ஆண்டு, 82வது சட்ட திருத்தத்தின் படி மேலும் ஒரு அடிப்படைக் கடமை சேர்க்கப்பட்டுள்ளது
(D) பொது பிரதிநிதித்துவச் சட்டம் 1951ல் அமல்படுத்தப்பட்டது

54. With reference to fundamental duties of Indian citizens, consider the following statements

1.Fundamental duties are enforceable by law

2.Fundamental duties establish a democratic balance

3.Some of the fundamental duties are moral duties while others are civic duties

Which of the above mentioned statement/s is/are correct?

(A) 1 and 2 only
(B) 2 and 3 only
(C) 1 and 3 only
(D) 1, 2 and 3 are correct

'அடிப்படை கடமைகள்' பற்றிய கீழ்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?

1.அடிப்படை கடமைகள் சட்டத்தால் வலியுறுத்தி நடைமுறைப்படுத்தப்பட தக்கவை

2.அடிப்படை கடமைகள் மக்களாட்சியை சமநிலைப்படுத்த உதவுகின்றன

3.அடிப்படை கடமைகள் சில அறமுறையானவை மற்றும் பல குடியியல் சார்ந்த கடமைகளாகும்

மேலே குறிப்பிட்ட கூற்று/கள் எது/எவை சரியானது?

(A) 1 மற்றும் 2 மட்டும்
(B) 2 மற்றும் 3 மட்டும்
(C) 1 மற்றும் 3 மட்டும்
(D) 1, 2 மற்றும் 3 சரியானவை

55. Which of the following statements are true about fundamental duties?

(i) Fundamental duties are laid down in Article 51-A of the Constitution.

(ii) 86th amendment Act, 2002 added 11th fundamental duty to the list.

(iii) To develop scientific temper is not a fundamental duty.

(A) (i) only
(B) (ii) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (i) and (iii) only

WeShine Academy
Guiding you to get through
TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

அடிப்படைக் கடமைகள் குறித்தக் கீழ்காணும் எந்த சொற்றொடர்கள் சரியானவை?

(i) அடிப்படைக் கடமைகள் அரசியலமைப்பின் விதி 51-A இல் கொடுக்கப்பட்டுள்ளது

(ii) 11வது அடிப்படை கடமையை 86வது திருத்தச்சட்டம் 2002ஆல் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

(iii) அறிவியல் மனப்பான்மையை வளர்த்தல் ஒரு அடிப்படை கடமையல்ல.

(A) (i) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்

56. Which of the following statements are true about fundamental duties?

(i) To provide free and compulsory education to children between the age 6-14 years

(ii) To safeguard public property

(iii) To develop Scientific Temper

(A) (i) only
(B) (ii) and (i) only
(C) (ii) and (iii) only
(D) (i), (ii) and (iii)

அடிப்படைக் கடமைகளைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) 6 - 14 வயது உள்ள குழந்தைகளுக்குக் இலவச மற்றும் கட்டாயக் கல்வி கொடுத்தல்

(ii) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்

(iii) அறிவியல் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல்

(A) (i) மட்டும்

(B) (ii) மற்றும் (i) ஆகியன மட்டும்

(C) (ii) மற்றும் (iii) ஆகியன மட்டும்

(D) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை

57. Which among the following statements on fundamental duties is/are correct?

(i) They serve as a reminder to the citizens that while enjoying their rights, also to be conscious of duties.

(ii) They serve as a warning against the antinationals.

(iii) They serve as a source of inspiration for the citizens and promote sense of discipline.

(iv) They are enforceable by law.

(A) (i), (ii) and (iii) are correct

(B) (i), (iii) and (iv) are correct

(C) (i) and (ii) are correct

(D) All are correct

அடிப்படைக் கடமைகள் பற்றிய கீழ்கண்ட கூற்றுகளில் எது/எவை சரி?

(i) உரிமைகளை அனுபவிக்கின்ற குடிமக்களுக்கு, அவர்களின் கடமைகள் பற்றி நினைவூட்டலாக இது அமைந்துள்ளது.

(ii) தேச விரோதிகளுக்கு ஓர் எச்சரிக்கையாக இது அமைந்துள்ளது.

(iii) குடிமக்களுக்கு உணர்ச்சிகளின் ஆதாரமாகவும், அவர்களிடம் ஒழுங்கை மேம்படுத்துமாறும் இது அமைந்துள்ளது.

(iv) இது சட்டத்தின் மூலம் நிலை நாட்டக்கூடியது.

(A) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரியானவை

(B) (i), (iii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை

(C) (i) மற்றும் (ii) ஆகியவை சரியானவை

(D) அனைத்தும் சரியானவை

58. The 86th Constitutional Amendment Act, 2002 has introduced the fundamental duty under 51 A(K) is

(A) To provide free and compulsory educational opportunities to all the children until they attain the age of fourteen.

(B) To value the rich heritage of our composite culture

(C) To defend the country and render national service when called upon to do so

(D) To protect the natural environment

86-வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் 2002-இன்படி 51 A(K)-இல் எந்த அடிப்படை கடமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது?

(A) 14 வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வி அளித்தல்

(B) பாரம்பரிய கலப்பு கலாச்சாரத்தை மதித்துப் பாதுகாத்தல்

(C) தேச பாதுகாப்பிற்காக தேவைப்படும்போது தேசபணியாற்ற தயாராயிருத்தல்

(D) இயற்கை சுற்றுச்சூழலை பாதுகாத்தல்

59. The fundamental Duties of Indian Citizens are incorporated in
(A) Part I of the Constitution
(B) Part II of the Constitution
(C) Part III A of the Constitution
(D) Part IV A of the Constitution

இந்திய குடிமக்களின் அடிப்படை கடமைகள் ________இல் சேர்க்கப்பட்டுள்ளன.
(A) அரசியலமைப்பு பகுதி I
(B) அரசியலமைப்பு பகுதி II
(C) அரசியலமைப்பு பகுதி III A
(D) அரசியலமைப்பு பகுதி IV A

60. Article 51A(h) has stated
(A) to value and preserve the rich heritage of our composite culture
(B) to develop the scientific temper, humanism and the sprit of inquiry and reform
(C) to defend the country and render national service when called upon to do so
(D) to uphold and protect the sovereignty, unity and integrity of India

சட்டப்பிரிவு 51A(h) வகுத்துரைப்பது
(A) நமது கலப்புருவான பண்பாட்டின் வளமார்ந்த மரபுச் செல்வத்தை மதித்துப் பாதுகாத்தல்
(B) அறிவியலார்ந்த உளப்பாங்கு, மனித நேயம், ஆய்ந்து தெளிந்து சீர்திருத்தும் ஆர்வம் ஆகியவற்றை வளர்த்தல்
(C) வேண்டுங்கால் நாட்டினைக் காத்தல் மற்றும் நாட்டுப்பணி ஆற்றுதல்
(D) இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை ஓங்கச் செய்து ஓம்பிகாத்தல்

# THANK YOU